செய்தி வெளியீடு எண்: 157 நாள்: 23.02.2019

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 22.2.2019 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் சிறைத்துறை, இந்தியன் ஆயில் கார்பரேஷன் நிறுவனத்துடன் இணைந்து வேலூர் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், கோயம்புத்தூர், பாளையங்கோட்டை மற்றும் புதுக்கோட்டை – பார்ஸ்டல் பள்ளி ஆகிய இடங்களில் உள்ள மத்திய சிறைச்சாலை வளாகங்களில் அமைக்கப்பட்டுள்ள பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்களையும் திறந்து வைத்தார்கள்.

குற்றவாளிகளை சிறையில் அடைத்து, அவர்களை சீர்திருத்தி, மீண்டும் சமுதாயத்தில் இணைந்து புது வாழ்வு தொடங்குவதற்குத் தேவையான பயிற்சிகளை அளிக்கும் பணியினை மேற்கொண்டு வரும் சிறைத் துறையினரின் மேம்பாட்டிற்காக புதிய சிறைச்சாலைகளை கட்டுதல், குடியிருப்புகளை கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களையும், சிறைவாசிகளின் மறு வாழ்வுக்காக சிறைவாசிகளால் தயாரிக்கப்படும் பொருட்களை விற்பனை செய்யும் சிறை அங்காடிகள் அமைத்தல், நவீன அடுமனைக்கூடம் கட்டுதல், சிறை தொழிற்கூடங்களில் உள்ள பழைய இயந்திரங்களுக்கு மாற்றாக புதிய இயந்திரங்களை கொள்முதல் செய்தல் போன்ற பல்வேறு திட்டங்களையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சிறை அங்காடிகளின் நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு அரசின் சிறைத்துறை, இந்தியன் ஆயில் கார்பரேஷன் நிறுவனத்துடன் இணைந்து வேலூர் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், கோயம்புத்தூர், பாளையங்கோட்டை மற்றும் புதுக்கோட்டை – பார்ஸ்டல் பள்ளி ஆகிய இடங்களில் உள்ள மத்திய சிறைச்சாலை வளாகங்களில் அமைக்கப்பட்டுள்ள பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்களையும் திறந்து வைத்தார்கள்.

இதன்மூலம், சிறைத்துறைக்கு பெட்ரோலியப் பொருட்களின் விற்பனை மற்றும் வாடகையாக மாதந்தோறும் சுமார் 2 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கும்.

மேலும், இத்திட்டத்தின் மூலம் தண்டனை சிறைவாசிகள் வேலைவாய்ப்பு பெறுவதுடன், பொருளாதார ரீதியாக உயர்வதற்கும் வழிவகை ஏற்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., சிறைத்துறை தலைவர் திரு.அசுதோஷ் சுக்லா, இ.கா.ப., இந்தியன் ஆயில் கார்பரேஷன் செயல் இயக்குநர் திரு.இரா. சித்தார்த்தன், இந்தியன் ஆயில் கார்பரேஷன் முதன்மைப் பொது மேலாளர் திரு.வை. கோபாலகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9